RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்






## ஊட்டி துணைவேந்தர்கள் மாநாட்டில் குடியரசு துணைத் தலைவர் பங்கேற்பு! ஆளுநர் மாளிகை அறிவிப்பு

சென்னை, ஏப்.23

ஊட்டியில் வரும் ஏப்.25, 26 தேதிகளில் நடைபெறும் பல்கலைக்கழக துணை வேந்தர்கள் மாநாட்டில் குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் கலந்து கொண்டு மாநாட்டினைத் தொடங்கி வைக்க உள்ளதாக ஆளுநர் மாளிகை அறிவித்துள்ளது.



இதுகுறித்து, ராஜ்பவன் வெளியிட்ட அறிவிப்பில் கூறி யிருப்பதாவது: தமிழகத்தில் உள்ள மாநில, மத்திய மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள், நிறுவனங்களின் துணைவேந்தர்கள் மாநாடு வரும் ஏப்ரல் 25 மற்றும் 26 தேதிகளில் ஊட்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற உள்ளது. துணைவேந்தர்கள் பங்கேற்கும் இந்த மாநாடு தொடர்ந்து 4வது ஆண்டாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் ஏப்.25ம் தேதி முதன்மை விருந்தினராக குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் பங்கேற்று, மாநாட்டை தொடங்கி வைக்கிறார். தமிழக ஆளுநரும், மாநில பல்கலைக்கழகங்களின் வேந்தருமான ஆர்.என்.ரவி, மாநாட்டுக்கு தலைமை தாங்குகிறார்.

தேசிய கல்விக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துதல், பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான கல்விசார் ஒத்துழைப்பு, கற்றலின் சிறப்புகளை மேம்படுத்த செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு, கல்வி நிறுவனங்களில் நிதி மேலாண்மை, ஆராய்ச்சி சிறப்பம்சங்கள், திறன் மேம்பாடு, தொழில்முனைவோர் திறன் வளர்ச்சி, மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வு மற்றும் தொழில் குறித்த விரிவான விவாதங்கள் மற்றும் கலந்தாய்வு அமர்வுகள் இம்மாநாட்டில் நடத்தப்படவுள்ளன.

கல்வித்துறை, அரசு மற்றும் தொழிற்துறையைச் சேர்ந்த சிறந்த பேச்சாளர்கள் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றுகின்றனர். மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அஜய் குமார் சூட் 'அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் எல்லைகள்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகிறார்.

இம்மாநாடு தமிழகம் முழுவதும் உள்ள மாநில, மத்திய மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள், நிறுவனங்களின் துணைவேந்தர்களை ஒன்றிணைத்து பணியாற்றுவதையும், சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதையும், உயர் கல்விக்கான புதுமையான அணுகுமுறைகளை ஆராய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## குரூப் டி பணியிடங்களுக்கு நிரந்தர நியமனங்களை ரத்து செய்யக் கூடாது: அன்புமணி வலியுறுத்தல்

சென்னை, ஏப்.23

அரசு உதவி பெறும் கல்லூரிகளில் குரூப் டி பணி யிடங்களை ஒழித்து விட்டு, குத்தகை நியமனங்களுக்கு அனுமதி அளித்து உயர்கல்வித்துறை மூலம் கடந்த 3ஆம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள 66 ஆம் எண் கொண்ட அரசாணையை தமிழக அரசு ரத்து செய்ய வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் வெளி யிட்டிருக்கும் அறிக்கையில், "தமிழ்நாட்டில் உள்ள அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இனி அலுவலக உதவியாளர் உள்ளிட்ட அனைத்து குரூப் டி பணியாளர்களையும் நிரந்தரமாக நியமிக்கக்கூடாது என்றும், ஒப்பந்தம் அல்லது அவுட்சோர்சிங் எனப்படும் குத்தகை முறையில் தான் நியமிக்க வேண்டும் என்றும் தமிழக அரசு ஆணையிட் டிருக்கிறது.

தமிழ்நாட்டில் தற்காலிக நியமனங்களை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் அதிகரித்து வரும் நிலையில், நிரந்தரப் பணியிடங்களையும் ஒப்பந்தப் பணியிடங்களாக தமிழக அரசு மாற்றி வருவது கண்டிக்கத்தக்கது. தமிழ்நாட்டில் பல்கலைக்கழகங்கள், அரசு கல்லூரிகள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் குரூப் டி பணியாளர்களில் பெரும்பான்மையினர் குத்தகை முறையில் தான் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அவர்களுக்கு மிகக் குறைந்த ஊதியமே வழங்கப்படுவதால் மிகப்பெரிய அளவில் மனிதவளச் சுரண்டல்கள் நடைபெறுகின்றன. இன்னொருபுறம் குத்தகை முறையில் பணியாளர்கள் நியமிக்கப்படுவதால் அவர்கள் இழைக்கும் தவறுகளுக்கு அவர்களை பொறுப்பேற்கச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அரசு அலுவலகங்களில் பராமரிப்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவை இரண்டுமே தவிர்க்கப்பட வேண்டியவை ஆகும்.

உயர்கல்வி நிறுவனங் களிலும், சில பொதுத்துறை நிறுவனங்களிலும் மட்டும் நடைமுறையில் உள்ள குத்தகை முறை நியமனங்களை அனைத்துத் துறைகளுக்கும் நீட்டிக்கவும் தமிழக அரசு முடிவு செய்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அப்படி ஒரு முடிவு எடுக்கப்பட்டால் தமிழ்நாட்டில் ஒன்றரை லட்சம் பணியிடங்கள் ரத்து செய்யப்படும் நிலை உருவாகும். இது திமுக அளித்த வாக்குறுதிகளுக்கு எதிரானது ஆகும்.

திமுக ஆட்சிக்கு வந்தால் 10 ஆண்டுகளுக்கும் மேலாக பணி செய்த தற்காலிக பணியாளர்கள் அனைவரும் பணி நிலைப்பு செய்யப்படுவார்கள்; மூன்றரை லட்சம் அரசு வேலைகள் வழங்கப்படும்; இரண்டு லட்சம் புதிய பணி யிடங்கள் ஏற்படுத்தப்படும் என்று வாக்குறுதி அளிக்கப் பட்டிருந்தது.

ஆனால், இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாதது மட்டுமின்றி அதற்கு முற்றிலும் மாறாக, இருக்கும் பணி யிடங்களை ஒழிப்பது, நிரந்தர பணியிடங்களை ஒப்பந்த பணியிடங்களாக மாற்றுவது போன்ற செயல்களில் தமிழக அரசு ஈடுபட்டு வருகிறது. அதுமட்டுமின்றி, இத்தகைய நியமனங்களில் இட ஒதுக்கீட்டு முறை கடைபிடிக்கப்படுவதில்லை என்பதால் இது சமூகநீதிக்கும் எதிரானது ஆகும்.

எனவே, அரசு உதவி பெறும் கல்லூரிகளில் குரூப் டி பணியிடங்களை ஒழித்து விட்டு, குத்தகை நியமனங் களுக்கு அனுமதி அளித்து உயர்கல்வித்துறை மூலம் கடந்த 3ஆம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள 66 ஆம் எண் கொண்ட அரசாணையை தமிழக அரசு ரத்து செய்ய வேண்டும். அனைத்துத் துறைகளிலும் குரூப் டி பணியிடங்கள் நிரந்தர அடிப்படையிலேயே நியமிக்கப்படும் என்றும் அரசு அறிவிக்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

## சிவகங்கையில் அரசு பேருந்து மீது டீசல், எரிவாயு டேங்கர் லாரிகள் அடுத்தடுத்து மோதல்: 20 பேர் காயம்



சிவகங்கை, ஏப்.23

சிவகங்கை அருகே அரசு பேருந்து மீது டீசல், எரிவாயு டேங்கர் லாரிகள் அடுத்தடுத்து மோதிவிபத்துக்கு உள்ளானதில் 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். மேலும் சாலையில் டீசல் ஓடியது.

மதுரையில் இருந்து சிவகங்கை நோக்கி மதுரை தொண்டி தேசிய நெடுஞ் சாலையில் இன்று காலை எரிவாயு மற்றும் டீசல் டேங்கர் லாரிகள் அடுத்தடுத்து வந்தன. திருமாஞ்சோலையை அடுத்து செம்பூர் என்ற இடத்தில் வந்தபோது, டீசல் டேங்கர் லாரி, எரிவாயு டேங்கர் லாரியை முந்த முற்பட்டது.

அப்போது சிவகங்கையில் இருந்து மதுரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அரசு பேருந்து மீது டீசல் டேங்கர் லாரி மோதியது. தொடர்ந்து எரிவாயு லாரியும் பேருந்தில் மோதியது. இதில் பேருந்தில் இருந்த பயணி ஒருவர் வெளியே தூக்கி வீசப்பட்டார். அவருடன் சேர்த்து பேருந்தில் பயணித்த 20க்கும் மேற்பட்ட பயணிகளுக்கு காயம் ஏற்பட்டது.

மேலும் டீசல் டேங்கர் லாரி ஓட்டுநரின் கால் இடிபாடுகளில் சிக்கி கொண்டது. அங்கிருந்தோர் காயமடைந்தோரை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் சிவகங்கை, மதுரை அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர். மேலும் டீசலும் கசிந்து சாலையில் ஓடியது. தகவலறிந்து வந்த பூவந்தி போலீஸார், சிவகங்கை தீயணைப்பு துறையினர் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு, போக்குவரத்தை சீர்செய்தனர்.

## கல்லல் முருகப்பா மேல்நிலை பள்ளியில் உலக புத்தக தின விழா





கல்லல் ஏப்.23



சிவகங்கை மாவட்டம் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் உலகப் புத்தக தின விழா கொண்டாடப்பட்டது. ஆசிரியர்கள் சாத்தையா அண்ணாத்துரை மாரிமுத்து சுப்பிரமணியன் மாரிமுத்து விஜயராணி கற்பகவல்லி உமாராணி அமுதா ஆகியோர் புத்தகத்தின் சிறப்புகளையும, புத்தகம் வாசிப்பதன் நன்மைகளையும் விளக்கி கூறினர். விழாவிற்கு தலைமை தாங்கிய பள்ளி தலைமை ஆசிரியர் அழகப்பன் புத்தகத்தின் மேன்மையை விளக்கியதுடன், தமிழ்நாடு அறிவியல் சார்பாக நடைபெற்ற துளிர் திறனறிவு தேர்வில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்களையும், இந்த மாதத்திற்கான துளிர் மாத இதழையும் வழங்கினார் ஆசிரியர் பிரபு கல்லல் கிளை நூலகத்தில் உறுப்பினராக சேர்க்கப்பட்ட இப்பள்ளியின் எட்டாம் வகுப்பு மாணவ மாணவிகளை அங்கு அழைத்துச் சென்று கிளை நூலகர் வசந்த செல்வியை அறிமுகம் செய்து வைத்ததோடு, இளம் பருவத்தில் நூலகம் எந்த வகையில் பயனுள்ளதாக இருக்கும் என்பததை எடுத்துரைத்துடன், நூலகத்தை தொடர்ந்து பயன்படுத்திட அறிவுறுத்தினார். மாணவர்களும் கோடை விடுமுறையில் நூலகத்திற்கு தொடர்ந்து வருவதாக உறுதியளித்தனர். முதன்முறையாக நூலகத்திற்கு வந்த மாணவர்கள் உற்சாகம் அடைந்ததுடன், புத்தகங்களை வாசித்து மகிழ்ச்சி அடைந்தனர்.

## போப் பிரான்சிஸ் இறுதி அஞ்சலி நிகழ்வில் அமைச்சர் நாசர் பங்கேற்பார்: தமிழக அரசு

சென்னை, ஏப்.23

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில், தமிழக அரசின் சார்பில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் கலந்து கொள்வார்கள் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.



இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸின் மறைவையொட்டி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கல் செய்தியில், பரிவோடும், முற்போக்குக் கொள்கைகளோடும் கத்தோலிக்கத் திருச்சபையினை வழிநடத்தி, பெரும் மாற்றங்களை முன்னெடுத்த ஆளுமையான திருத்தந்தை போப் பிரான்சிஸ் மறைவு குறித்து அறிந்து மிகவும் வேதனையடைந்ததாகத் தெரி வித்திருந்தார்.

அதோடு, நேற்று (ஏப்.22) தமிழகச் சட்டமன்றப் பேரவையில், மறைந்த போப் பிரான்சிஸுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், ரோம் நகர் வாடிகனில் நடைபெறும் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில், தமிழக அரசு சார்பில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ்தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர் இனிகோ எஸ்.இருதயராஜ் ஆகியோர் கலந்து கொள்ள தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விருதுநகர் மாவட்ட மாற்றுத் திறனாளிக்கு கலைஞர் கனவு இல்லம் அமைச்சர் தங்கம் தென்னரசு செய்த முயற்சி





விருதுநகர், ஏப்.23

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நரிக்குடி ஒன்றியம் நல்லுக்குறிச்சி கிராமத்தில் வசித்து வரும் மாற்றுத்திறனாளி தனுஷ் கோடி என்பவர், தான் வசிக்கும் குடிசை வீடு முற்றிலும் சிதிலமடைந்து இருப்பதால் , தற்போது வீடின்றி ஊர் பொது கலையரங்கத்தில் தங்கி வருவதாகவும், எனக்கு வீடு கட்டித்தர வேண்டும் என கடந்த முறை அப்பகுதிக்கு ஆய்விற்கு சென்ற நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு விடம் கண்ணீர் மல்க கோரிக்கை வைத்தார். உடனடியாக நரிக்குடி வட்டார வளர்ச்சி அலுவலரை அழைத்து இவருக்கு வீடு வழங்க ஏற்பாடு செய்யுமாறு அறிவுறுத்தினார். அதனடிப்படையில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ .3.50 இலட்சம் மதிப்பீட்டில் வீடு கட்ட வேலை உத்தரவு (work order) ஆணை வழங்கினார் .

# ஆந்திர பிரதேச பணிப் பத்திரிக்கையாளர்கள் கூட்டமைப்பு 4ம் மாநாடு விழா அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர், எம்.எல்.ஏ.க்கள், பங்கேற்று சிறப்பிப்பு

சித்தூர் ஏப்23




ஆந்திர பிரதேசம், சித்தூர் மாவடடம், சித்தூர் ஞீறி கூட்ட அரங்கம், குண்டலா ராமகிருஷ்ண ஐயா வளாகத்தில், ஆந்திர பிரதேச பணிப் பத்திரிக்கையாளர்கள் கூட்டமைப்பு (AP-WJF) 4ம் மாநாடு விழா நாட்டிய கலை நிகழ்ச்சியுடன் குத்து விளக்கேற்றி பத்திரிக்கையாளர் சங்க நிர்வாக தலைவர் செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஆந்திர மாநில அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர், எம்.எல். ஏ.க்கள், தொழிலதிபர்கள், அரசு அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள் பத்திரிகையாளர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றி விழாவை சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களை கௌரவிக்கப்பட்டு, பத்திரி கையாளர்களின் மகத்துவத்தை பாராட்டி சிறப்புரையாற்றி, பத்திரிக்கையாளர்களுக்கு ரூபாய் 5 லட்சத்து, 20 ஆயிரம் மதிப்பில் காப்பீடு காசோலை வழங்கப்பட்டு, பத்திரிக்கையாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்து, பத்திரிகையாளர்களை பாராட்டி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக தென்னிந்திய பத்திரிக்கையாளர் சங்கத்தின் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத் தலைவர் டாக்டர். ராஜ்பாபு, துணைச் செயலாளர்கள் ஜெ. முஜிப் ரகுமான், டைமண்ட் கெஜராஜ், துணை ஒருங்கிணைப்பாளர், மூத்த பத்திரிக்கையாளரும் ஷிமியிகி மாவட்ட அமைப்பு செயலாளர் முருகானந்தம் மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூரில் சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் 134 வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் பழைய பெருங்களத்தூரில் உள்ள அண்ணல் அம்பேத்கரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் இதில் பெருங்களத்தூர் தெற்கு பகுதி எம்.செந்தில் குமார், வி.வெங்கடேஷ், ஜி..ரஞ்சித் குமார், மற்றும் வார்டு அணி நிர்வாகிகள் ஏ.பாளையம், கே.கவி, வி.தினேஷ், என்.நந்தா, இ.சுரேஷ், ஜே.வேலன், ஆர்.கே.ரேவா, இ.பார்த்திபன், ஆர்.கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

# தாம்பரம் மாநகராட்சி பகுதி திமுக சார்பில் நீர்மோர் பந்தல்

செங்கல்பட்டு, ஏப்.23



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட 49 வது வார்டு சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் ஆணைக்கிணங்க, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினரும் தாம்பரம் மாநகர செயலாளருமான எஸ்.ஆர். ராஜா வழிகாட்டுதலின்படி தாம்பரம் மாநகராட்சி, 4வது மண்டல குழு தலைவரும், பகுதி கழக செயலாளருமான டி.காமராஜ் தலைமையில் தாம்பரம் வித்யா தியேட்டர் அருகில் கக்கன் தெருவில். 49வது வட்ட நிர்வாகி ப.விஜய் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் பந்தலில் நேற்று பொது மக்களுக்கு நீர் மோர் தர்பூசணி வெள்ளரி உள்ளிட்ட பொருட்களை வழங்கினார்கள் இந்த நிகழ்ச்சியில் துப்புரவு பணியாளர்களுக்கு மற்றும் பொதுமக்களுக்கு முழு தர்பூசணி பழம் வழங்கப்பட்டது இதில் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பிகேஏ. சத்திய பிரபு, மாநகர துணை அமைப்பாளர்கள் எஸ்.ராஜேஷ், வி.கார்த்திக், வே.சிவசுப்பிரமணியம், பகுதி கழக துணை செயலாளர் ஆர்.செல்வகுமார், தலைமை கழக பேச்சாளர் எஸ்.ஜி. கருணாகரன், ஜி.கணபதி, எம்.ரவிக்குமார், ரமேஷ், சே.மைக்கல் ராஜ், கா.மு. சூர்யா, கே.எம்.தாஸ், ந.மதன், கே.எஸ்.யுவராஜ், வெ.கார்த்திக் ராஜ், எம்.ராஜீ, பி.மோகன் தாஸ், பா.ஹரிஷ், எஸ்.ரமேஷ், ஏ.சதீஷ், இ.நவீன், ஜே.டேவிட், ஆர்.ஹரி, டிகே.சேகர், எம்.குருமணி, எஸ்.குமார், மோகனலட்சுமி, விஜயலட்சுமி, வனஜா, தினேஷ் மற்றும் மாநகரம், பகுதி, வட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட 48 காலனி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் 55 லட்ச ரூபாய் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் புதிதாக கழிப்பறைகள் கட்டிடத்தை நகர்மன்ற தலைவர் சிஎம்.துரை ஆனந்த் நேற்று முன்தினம் திறந்து வைத்தார். அதைத்தொடர்ந்து மாணவச் செல்வங்களுக்கு சிறப்புரையாற்றி இனிப்புகள் வழங்கி சிறப்பித்தார். உடன் நகராட்சி ஆணையாளர், பொறியாளர், அலுவலர்கள்,மற்றும் சிவகங்கை நகர் மன்ற உறுப்பினர்கள் ஜெயகாந்தன், ராஜேஸ்வரி மற்றும் தலைமை ஆசிரியர்,ஆசிரிய பெருமக்கள் மற்றும் மாணவச் செல்வங்கள் ஆகிய கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கீழக்கோட்டையில் மரக்கன்றுகள் நட்டு உலக பூமி தினவிழா கொண்டாட்டம்

சிவகங்கை ஏப்23



சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் சிவகங்கை மாவட்ட தமிழ்நாடு அறிவியல் இயக்கம் தேசிய பசுமை படை மற்றும் சுற்றுச்சூழல் மன்றம் சார்பில் உலக பூமி தினவிழா கொண்டாட்டம் நடைபெற்றது. தலைமை ஆசிரியை தெய்வானை தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி முன்னிலை வகித்தார். ஆசிரியை வாசுகி வரவேற்றார்.

தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி உலக பூமி தினத்தில் இந்தாண்டிற்கான உலகளாவிய கருப்பொருள் "நமது சக்தி நமது கோள்." புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்தி சமூகங்களுக்கு ஆரோக்கியமான மற்றும் மீள்தன்மை கொண்ட எதிர்காலத்தை உருவாக்குவதை வலியுறுத்துகிறது. எண்ணெய் கசிவின் மூலம் அமெரிக்காவில் ஏற்பட்ட பேரணி புரட்சியின் காரணமாக 1970 இலிருந்து ஏப்ரல் 22ஆம் தேதியை புவி தினமாக அமெரிக்கா கொண்டாடி வந்த நிலையில் 1990 ஆம் ஆண்டு ஐநா சபையால் புவி தினம் அங்கீகரிக்கப்பட்டு உலகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. காடுகளை அழித்து வீடுகளை உருவாக்கி நாகரீகம் வளர்த்த நாம் இன்று மீண்டும் மரங்களை வளர்த்தால் தான் மகிழ்ச்சி நீடிக்கும் என உணர தொடங்கி இருக்கிறோம். காடுகள் மலைகள் பாலைவனங்கள் ஆறுகள் சமவெளிகள் மிகப்பெரிய நிலப்பரப்பு என அனைத்தும் தன்னுள் அடக்கி உயிரின வாழ்க்கைக்கு தேவையான அத்தியாவசியமான பொருட்களை தருவது நம் பூமி. மனித தேவையின் அத்தியாவசியம் மற்றும் அதிகப்படியான பொருட்களையும் வளங்களையும் வழங்கி இன்றைய நிலைமையில் எதுவும் இல்லாமல் இருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் எங்கு பார்த்தாலும் இயற்கை பேரிடர்கள். இதற்கு காரணம் புவி வெப்பமயமாதல் சுற்றுச்சூழல் மாசுபாடு மக்கள்தொகை பெருக்கம் தொழில்மயமாதல் என காரணங்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம். எனவே மரங்களை வளர்ப்போம்.

ஒவ்வொரு நாளும் பூமியை நேசிப்போம். பாதுகாப்போம் என்று கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தினார். கிராம சுகாதார செவிலியர் அனிதா மக்களை தேடி மருத்துவம் செவிலியர் பவித்ரா ஆசிரியர்கள் மாணவர்கள் இணைந்து பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டனர். இயற்கையாக விளைந்த தர்பூசணி பழங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. ஆசிரியை கமலம்பாய் நன்றி கூறினார். கணினி பயிற்றுநர் வித்யா மாணவ மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

# பெருங்களத்தூரில் ஸ்ரீ சைதன்யா பள்ளியில் நடந்த ஒலிம்பேட் தேர்வில் தமிழ்நாடு ஸ்ரீ சைதன்யா பள்ளி மாணவர்கள் சாதனை

பெருங்களத்தூர் ஏப்23




பெருங்களத்தூரில் ஸ்ரீ சைதன்யா பள்ளியில் நடைபெற்ற இந்தியன் நேஷனல் டேலண்ட் ரிசோர்ஸ் ஒலிம்பேட் தேர்வில் தமிழ்நாடு ஸ்ரீ சைதன்யா பள்ளி மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட பெருங்களத்தூரில் ஸ்ரீ சைதன்யா பள்ளியில் இயக்குனர் சீமாபோப்பனா மற்றும் தமிழ்நாடு நிறுவன மேலாளர் ஹரிபாபு அவர்கள் தலைமையில் பள்ளி மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது

ஸ்ரீ சைதன்யா பள்ளியில் நடைபெற்ற இந்தியன் நேஷனல் டேலண்ட் ரிசோர்ஸ் ஒலிம்பேட் தேர்வில் தமிழ்நாடு ஸ்ரீ சைதன்யா பள்ளி குழுமத்தில் தாம்பரம், பெரும்பாக்கம் பூந்தமல்லி கிளையில் பயிலும் 29 மாணவர்கள் சிறப்பு பரிசாக லேப்டாப் வழங்கப்பட்டது அதனை தொடர்ந்து 67 மாணவர்களுக்கு டாப் பரிசுப் பொருட்களை பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர்

இந்த சாதனை கொண்டாடும் வகையில் தாம்பரம் பெருங்களத்தூரில் உள்ள ஸ்ரீ சைதன்யா பள்ளியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் உதவி பொது மேலாளர் ஸ்ரீநிவாசலு, மாநில ஒருங்கிணைப்பாளர் துர்கா பிரசாந்த், மாநில துணை ஒருங்கிணைப்பாளர் திலீப், மண்டல தலைவர் திலக், தாம்பரம் பள்ளியின் முதல்வர் ராஜலட்சுமி வெங்கட், பெரும்பாக்கம் பள்ளி முதல்வர் வனிதா, பூந்தமல்லி பள்ளியில் முதல்வர் பிரியதர்ஷினி ஆகியோர் தலைமையில் நிகழ்ச்சி தொடங்கி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு லேப்டாப் டேப் பதக்கமும் சான்றிதழ்கள் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்து கொண்டனர்

இந்த நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்..

# அதிகார வரம்பில் உள்ள திமுக தலைவர் மு க ஸ்டாலின் ஒன்றிய அரசிடம் இவ்வளவு தூரம் முரண்படுவது மிகப்பெரிய விஷயம்

## காங்கிரஸ் முன்னாள் மாநிலத் தலைவர் கே எஸ் அழகிரி பேட்டி

பழனி ஏப்23



திண்டுக்கல் மாவட்டம் பழனி முருகன் கோயிலுக்கு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவர் கே. அழகிரி சாமி தரிசனம் செய்ய வந்திருந்தார். பின்னர் பத்திரிகையாளர்களை சந்தித்த அவர் தவறான அரசியல் முன்னுதாரணத்தை வைத்து பாஜக தேசத்தை தவறான பாதைக்கு அழைத்துச் செல்வதாக தெரிவித்தார். இந்து மதத்தின் மீது அதிக நம்பிக்கை உள்ள ராமர் மீது அதிக நம்பிக்கை உள்ள கடவுள் நம்பிக்கை அதிகம் உள்ள தேசத்தந்தை மகாத்மா காந்தி இந்திய எல்லைக்குள் வாழ்பவர்கள் அனைவரும் இந்தியர்களே. இந்தியாவின் பழமே அதுதான் என கூறியுள்ளதாக தெரிவித்தார். வெற்றி பெற்று அதிகாரத்திற்கு வந்துள்ள பாஜக மக்களை பதற வைத்து தவறான பாதையில் மோடி அரசாங்கம் செல்வதாக தெரிவித்தார். துணை ஜனாதிபதி உச்சநீதிமன்றத்தை பயமுறுத்தி அச்சமடைய செய்வதாகவும் அவர்களது கொள்கை சித்தாந்தம் மூலம் உச்ச நீதிமன்ற நீதிபதிகளை அச்சுறுத்தும் வழியில் செயல்படுவதாக தெரிவித்தார். இதற்கு எதிரான மக்கள் கருத்தை உருவாக்க வேண்டும் திமுக தலைவர் மு க ஸ்டாலின் இதில் உறுதியாக இருந்து செயல்படுகிறார்.

அதிகார வரம்பில் இருக்கும் நிலையில் ஒன்றிய அரசுடன் இவ்வளவு தூரம் முரண்படுவது மிகப்பெரிய விஷயமாகும். அவர் எதற்கும் தயாராக இருந்து மோடியை எதிர்த்து வருவதாக தெரிவித்தார். இந்நிகழ்வில் மாவட்டத் தலைவர் சதீஷ்குமார், நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாரிகண்ணு மாவட்ட செயலாளரும் கவுன்சிலர் மகாலட்சுமி மாசிலாமணி, மாவட்ட மனித உரிமைக் கழக தலைவர் மணிகண்டன், மாவட்ட சிறுபான்மை பிரிவு தலைவர் பர்வீஸ் அலி அகமது, நகரத் துணைத் தலைவர் பழனியப்பன், சட்டமன்றத் தொகுதி முத்துசாமி, வட்டாரத் தலைவர்கள் ராமராஜ், முத்தையா, பேரூர் காங்கிரஸ் தலைவர்கள் லோகநாதன் கவிமணி மேற்கு மண்டல காங்கிரஸ் தலைவர் முஹம்மது ரபிக், நஸ்ரூள் உட்பட ஏராளமானவர் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாநகராட்சி நேருஜி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் உள்ள தேர்தல் பொருட்கள் வைப்பறை கட்டடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள நகர்ப்புற உள்ளாட்சி தற்செயல் தேர்தல்கள்2025ல் பயன்படுத்தப்பட்ட மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், தலைமையில் பெங்களுரு பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிட் பொறியாளர் தலைமையிலான குழுவினர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டனர்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மாநகர சுகாதார அலுவலர் மற்றும் அதிகாரிகள் இணைந்து சோதனை செய்தனர் இதில் பல கடைகளில் இருந்து பண்டல் பண்டலாக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா பறிமுதல் செய்யப்பட்டது இந்த அதிரடி வேட்டையில் மாநகர சுகாதார அலுவலர் ஆல்பர் மதயரசு பிளாரன்ஸ் மேரி பகவதி பெருமாள் ராஜாராம் ராஜா முருகன் ஈடுபட்டனர்.

## மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் உலக கல்லீரல் தின விழா

மதுரை ஏப் 23




உலக கல்லீரல் தினத்தை முன்னிட்டு மதுரை மீனாட்சி மருத்துவமனை மருத்துவ நிபுணர்கள் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது: ஆரோக்கியமற்ற உணவுமுறைகள், அடிக்கடி பேக்கரி தயாரிப்புகளை உட்கொள்ளுதல், சர்க்கரை அதிகம் சேர்க்கப்பட்ட பானங்களையும், மதுபானங்களையும் அருந்துதல் ஆகியவை கல்லீரல் நோய்க்கு அதிகமான பங்களிப்பை வழங்கி வருகின்றன குறிப்பாக இளவயது நபர்கள் மத்தியில் கல்லீரல் நோய் அதிகமான காணப்படுகிறது என்று கவலையுடன் சுட்டிக்காட்டினர். இத்தகைய விரும்பத்தகாத பழக்கவழக்கங்கள், உடற்பருமன் மற்றும் நீரிழிவு போன்ற வளர்சிதை மாற்ற சீர்கேடுகளுக்கும் வழிவகுக்கும். கல்லீரல் ஆரோக்கியத்தை பராமரிக்கவும், கல்லீரல் நோய் வராமல் தடுக்கவும், ஊட்டச்சத்து மிக்க உணவின் முக்கியத்துவத்தை மருத்துவ நிபுணர்கள் வலியுறுத்தினர். "உணவே மருந்து" என்ற இந்தாண்டு கல்லீரல் தின கருப்பொருளை இதற்கு எடுத்துக்காட்டாக குறிப்பிட்டனர்.இந்நிகழ்வில்

டாக்டர். ஸ்ரீனிவாசன் ராமச்சந்திரன், மருத்துவ மற்றும் குடல், இரைப்பை அறுவை சிகிச்சை துறையின் முதுநிலை நிபுணர் டாக்டர். மோகன், மருத்துவ மற்றும் குடல், இரைப்பை அறுவை சிகிச்சை துறையின் முதுநிலை நிபுணர் டாக்டர். ரமேஷ் அர்த்தனாரி, மருத்துவ இயக்குநரும், குடல், இரைப்பை அறுவை சிகிச்சை துறையின் தலைவருமான டாக்டர். ஸ்ரீவித்யா, குடல், இரைப்பை அறுவை சிகிச்சை துறையின் இணை மருத்துவ நிபுணர் ஆகியோர் கலந்து கொண்டனர்




கன்னியாகுமரி மாவட்டம் அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களை நாசமாக்கும் தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறையை கண்டித்து நாகர்கோவில் வேப்பமூட்டில் பி.எம்.எஸ் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது 100 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்..



கன்னியாகுமரி மாவட்டம் ஆசாரிப்பள்ளம் காவல் நிலையம் முன்பு குற்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மினி பேருந்து, டெம்போ போன்ற வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகிறது. மேலும் அந்த இடத்தில் பேருந்துக்காக காத்திருக்கும் மக்கள் கடும் அவதி அடைகின்றனர். வாகனங்கள் வேறு இடத்திற்கு மாற்றப்படுமா? என பொதுமக்கள் வாகன ஓட்டிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# ஸ்ரீ சைதன்யா பள்ளி மாணவர்கள் INSTSO Level-2 தேர்வில் வரலாற்று சாதனை பெற்றனர்

நொளம்பூர் ஏப்.23




சென்னை அடுத்த நொளம்பூர் பகுதியில் ஸ்ரீ சைதன்யா பள்ளி மாணவர்கள் INSTSO Level-2 தேர்வில் வரலாற்று சாதனை பெற்றனர் பள்ளி ஏஜிஎம். ராஜசேகர் ரெட்டி தலைமையில் செயல்படும் நொளம்பூர் மண்டலம் மற்றும் அதன் கிளைகளான மாதவரம், மூலக்கடை, மணப்பாக்கம் ஐயப்பன்தாங்கல், கே.கே நகர், இராமாபுரம், நொளம்பூர் கிளைகளை சார்ந்த மாணவர்களில் மொத்தம் 227 மாணவர்கள் சிறந்த மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றுள்ளனர் இதில் 87 மாணவர்கள் MT-SOவிலும், 67 STSOவிலும் அதிக மதிப்பெண்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். மேலும் 19 மாணவர்கள் GTSO விலும், 41 மாணவர்கள் ETSOவிலும், 12 மாணவர்கள் கிஜிஷிளி விலும் வெற்றி பெற்று சிறந்த மதிப்பெண்களை பெற்றுள்ளனர். வெற்றி பெற்ற அனைத்துமாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர், ஆசிரியர்களுக்கு ஸ்ரீ சைதன்யா பள்ளி இயக்குனர் சீமா, தலைமைச் செயலர், தமிழ்நாடு ஹரிபாபு மற்றும் ஏஜிஎம்.ராஜசேகர் ரெட்டி கலந்து கொண்டு மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்து பாராட்டி உள்ளனர். இறுதியாக இந்த நிகழ்ச்சியில் அர்சனா வெற்றிபெற்ற மாணவர்களை பாராட்டியும், பரிசுகளை வழங்கி விழாவினை சிறப்பித்தார்..

# மதுரை மாவட்ட செய்தியாளர் சுற்றுப் பயணம் வீட்டிலிருந்தபடியே ஆன்லைன் மூலம் காய்கறிகள்

## உழவர் சந்தைகள் டிஜிட்டல் மயம் குறித்து கேட்டறிந்த ஆட்சியர்

மதுரை, ஏப்.23





மதுரை மாவட்டத்தில் அண்ணாநகர், சின்ன சொக்கிகுளம், பழங்காநத்தம் மற்றும் ஆனையூர் ஆகிய 4 இடங்களில் செயல்பட்டு வரும் உழவர் சந்தைகளை டிஜிட்டல் மயமாக்கப்படுவது குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா, இ.ஆ.ப., , செய்தியாளர்களுடன் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது காய்கறிகளை விற்பனை செய்யும் விவசாய பெருமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களை நேரடியாக சந்தித்து அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்தார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் .மா.சௌ.சங்கீதா, செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழகத்தில் முதல் முறையாக கடந்த 2000வது ஆண்டு அப்போதைய முதல் அமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் மதுரை அண்ணாநகரில் உழவர் சந்தை திட்டத்தை தொடங்கி வைத்தார். இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக விவசாயிகள் இருந்து காய்கறிகளை பொதுமக்கள் வாங்கும் வகையில், இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டது. அவரது ஆட்சிக்காலத்திற்கு பிறகும் இந்தத்திட்டத்தின் முக்கியத்துவம் கருதி இந்த திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்தது. மதுரையில் தற்போது அண்ணாநகர், சின்ன சொக்கிகுளம், பழங்காநத்தம் மற்றும் ஆனையூர் ஆகிய4 இடங்களில் உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில், அதிகரித்துவரும் விற்பனையை கருத்தில் கொண்டு உழவர் சந்தையில் இருந்து வீடுகளுக்கே நேரடியாக டோர் டெலிவரி செய்யும் திட்டத்தை செயல்படுத்த மாநகராட்சி நிர்வாகம் முடிவுசெய்துள்ளது. இதற்காக சென்னைக்கு அடுத்தபடியாக மதுரையில் உள்ள உழவர் சந்தைகள் டிஜிட்டல் மயமாக்கப் படுகின்றன.

விரைவில் மதுரையிலுள்ள உழவர் சந்தைகளில் இருந்து பொது மக்களின் வீடுகளுக்கு நேரடியாக காய்கறிகள் விற்பனை செய்யும் திட்டம் தொடங்கப்படும். தற்போது அதற்கான பணிகள் நடந்து வருகின்றன. மேலும், உழவர் சந்தைகளில் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கும் பொருட்டு பதிவுசெய்த விவசாயிகளுக்கு எலக்ட்ரானிக் தராசுகள் வழங்கப்படும்.

அண்ணாநகர் உழவர் சந்தையிலிருந்து, மாட்டுத்தாவணி மார்க்கெட் வெறும் 2 கி.மீ. தொலைவே உள்ள போதிலும், பொது மக்கள் உழவர் சந்தைகளிலேயே காய்கறிகளை வாங்க விரும்புகின்றனர். இங்கு குளிர்பதன கிடங்கு உள்ளிட்ட போதிய சேமிப்பு கிடங்கு வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். விவசாயிகளின் கோரிக்கையினை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சேமிப்புகிடங்கு வசதிகள் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ. சங்கீதா, தெரிவித்தார்.

# ஆர் எஸ் மங்கலம் மின் வாரிய துறை அதிகாரிகளால் தமிழ்நாடு அரசுக்கு கிராம மக்கள் மத்தியில் அவப்பெயர்

ராமநாதபுரம் ஏப்.23



ராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகா ஆனந்தூர் அருகே திருத்தேர்வளை ஊராட்சி திருத்தேர்வளை கிஜிகாலனி பகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளாக குறைவான மின் விநியோகம் இருப்பதால் இப்பகுதியில் வாழும் 35க்கு மேற்பட்ட குடும்பங்கள் தினசரி சிரமம் அடைந்து வருகின்றன இது குறித்து பல முறை ஆன்லைனில் புகார் செய்தும் கிராம சபை கூட்டங்களில் அதிகாரிகளிடம் கூறியும் இதுநாள் வரை எந்த பயனும் இல்லைபுகார் செய்யும் போது மட்டும் கண்துடைப்பு நாடகம் நடத்தும் வகையில் அவ்வப்போது அதிகாரிகள் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக ஆய்வுமட்டுமே செய்து கொண்டு செல்வது தொடர் கதையாக உள்ளது இதனால் இப்பகுதியில் உள்ள பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் ,குழந்தைகள் முதியவர்கள் நோயாளிகள் என அனைவரும் நாளுக்கு நாள் மிகுந்த சிரமம் அடைந்து வருகின்றனர் அதுமட்டுமின்றி வீட்டில் உள்ள மின் சாதன பொருட்கள் சேதம் அடைந்து வருவதால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக வேதனை.

இதுகுறித்து அப்பகுதிமக்கள் கடந்த 16 ஆம் தேதி மின்வாரிய துறைக்கு ஆன்லைன்வாயிலாக புகார் தெரிவித்து இருந்த நிலையில் அன்றைய தினமே அதிகாரிகள் சம்மந்தப்பட்ட பகுதிகளை ஆய்வுசெய்து ஓரிரு நாட்களில் சீரான முறையில் மின் விநியோகம் கிடைத்திட பணிகள் மேற்கொள்கிறோம் என உறுதியளித்தனர் ஆனால் ஆறு நாட்கள் ஆகியும் சம்மந்தப்பட்ட பகுதியில் அதிகாரிகள் எந்த ஒரு பணியும் மேற்கொள்ளாமல் மாறாக முன்பு இருந்ததை விட மிக குறைந்த அளவு மின் விநியோகம் கிடைப்பதால் அப்பகுதி மக்கள் அதிர்ச்சி அடைந்து உள்ளனர் .கடந்த மூன்று ஆண்டுகாலமாக மக்கள் படும் சிரமத்தை கண்டு கொள்ளாமல் அலட்சிய போக்கில் தமிழ்நாடு அரசுக்கு கிராம மக்கள் மத்தியில் அவப்பெயரை உண்டாக்கும் வகையில் செயல்படும் ஆர் எஸ் மங்கலம் மின்வாரியதுறை அதிகாரிகள் மீது துறை சார்ந்த அமைச்சர் மற்றும் மாவட்ட நிர்வாகம் துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் திருத்தேர்வளை கிஜிகாலணி பகுதியில் புதிய மின் மாற்றி அமைத்துசீரான முறையில் மின் விநியோகம் கிடைத்திட ஒரு வார காலத்திற்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இல்லையெனில் அதிகாரிகளின் அலட்சியத்தால் குறைவான மின் விநியோகம் காரணமாக சேதம் அடைந்த மின் சாதன பொருட்களுடன் அதற்க்கு நிவாரணம் கேட்டும் சீரான மின் விநியோகம் கிடைத்திட துறை சார்ந்த அமைச்சர் மற்றும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் கிராம மக்கள் போராட்டம் நடத்த நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

காத்து இருந்து பார்ப்போம் அரசுக்கு கிராம மக்கள் மத்தியில் அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் அலட்சியமாக செயல்படும் ஆர் எஸ் மங்கலம் மின்வாரிய துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க படுமா ? கிராம மக்களுக்கு சீராக மின் விநியோகம் கிடைத்திட புதிய மின் மாற்றி ஒருவார காலத்திற்குள் அமைக்கப் படுமா? இல்லையெனில் சேதம் அடைந்த மின் சாதன பொருட்களுக்கு நிவாரணம் கேட்டு பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் கிராம மக்கள் போராட்டம் நடைபெறுமா ???

# மதுரையில் தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் தொழில் வர்த்தகப் பொருட்காட்சி

மதுரை, ஏப்.23

தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் தொழில் வர்த்தகப் பொருட்காட்சி 2025, மதுரை தமுக்கம் மைதானத்தில் 23.04.2025 புதன்கிழமை முதல் 27.04.2025 ஞாயிற்றுக்கிழமை வரை 5 நாட்கள் மிகச் சிறப்பான முறையில் பிரம்மாண்டமாக 200 க்கும் மேற்பட்ட ஸ்டால்களுடன் நடைபெற உள்ளது. தமிழகம் மட்டுமல்லாது பிற மாநிலங்களிலுள்ள சிறிய, பெரிய உற்பத்தியாளர்களும், வணிக நிறுவனங்களும் ஸ்டால்கள் அமைத்து அதி நவீனமான பொருட்களையும், சாதனங்களையும் பார்வைக்கு வைத்து விற்பனை செய்ய உள்ளனர். தமிழக அரசின் சார்பில் மகளிர் சுய உதவி குழுக்களும் அதிகளவில் ஸ்டால்கள் அமைக்கவுள்ளனர். சுமார் 1 லட்சத்திற்கும் அதிகமானோர் பொருட்காட்சியை பார்வையிட்டு பயனடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பொருட்காட்சியில் உணவகங்கள், சிறுவர் சிறுமிகளுக்கான நவீன விளையாட்டு சாதனங்களும் அமைக்கப்பட உள்ளன. தென்மாவட்டத்தில் முதன்முறையாக குளுகுளுப் பேருந்தில் 12 னு விளையாட்டுகள் இடம்பெற உள்ளன.




பொருட்காட்சிக்கான அனுமதி இலவசம். பொருட்காட்சி அனுமதி சீட்டு எண்களின் அடிப்படையில் குலுக்கல் முறையில் மதியம் 1 மணி, 3 மணி, 5 மணி, 7, மணி மற்றும் 9 மணி ஆகிய நேரங்களில் தினசரி ஐந்து பரிசுகளும், பொருட்காட்சி இறுதி நாளன்று மெகா பம்பர் பரிசாக மதுரை நிப்பான் பர்னிச்சர் நிறுவனம் வழங்கும் Hero Honda Motor Cycle ஒன்றும், பம்பர் பரிசுகளாக மதுரை ஸ்ரீ பாண்டின் மோட்டார்ஸ் நிறுவனம் வழங்கும் டி.வி.எஸ் ஸ்கூட்டி மோட்டார் சைக்கிள் ஒன்றும், சத்யம் குருப் ஆஃப் கம்பெனிஸ் வழங்கும் எலக்ட்ரிக் மோட்டார் சைக்கிள் ஒன்றும், மதுரை விங்ஸ் என்ஜினியரிங் கம்பெனி வழங்கும் எலக்ட்ரிக் மோட்டார் சைக்கிள் ஒன்றும், விக்னேஷ் பார்மா குரூப் வழங்கும் எல்.ஜி டபுள் டோர் பிரிட்ஜ் ஒன்றும் வழங்கப்பட உள்ளன.

பொருட்காட்சி ஐந்துநாட்களும் தினசரி காலை 11 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் நடைபெறும். தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் தலைவர் டாக்டர் ஜெகதீசன் மற்றும் பொருட்காட்சி குழுவின் தலைவராக வரதராஜன், செயலாளர் ஸ்ரீதர், துணைத் தலைவர்களாக ராஜமூர்த்தி, முத்து, நவாஸ் பாபு, ஒருங்கிணைப்பாளர்களாக சத்யம் செந்தில் குமார், சாகித் அலி ஆகியோர் மிகச் சிறப்பாக செயலாற்றி வருகின்றனர். சங்கத்தின் முன்னாள் தலைவர் நீதிமோகன், துணைத் தலைவர்கள் ரமேஷ் மற்றும் தனுஷ்கோடி ஆகியோர் பொருட்காட்சி குழு ஆலோசகர்களாகவும் செயல்பட்டு வருகின்றனர்.

பொருட்காட்சியினை 23.04.2025ம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணியளவில் மதுரை, தமுக்கம் கன்வென்ஷன் சென்டரில் மாநகர மேயர் இந்திராணி பொன் வசந்த் குத்துவிளக்கேற்றி துவக்கி வைக்கிறார்.

மதுரை மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகிக்கிறார். மதுரை மாநகராட்சி வடக்கு மண்டலத் தலைவர் திருமதி சரவண புவனேஸ்வரி, மதுரை மாநகர துணைமேயர் நாகராஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். பொருட்காட்சியின் துவக்க விழா அழைப்பிதழை இத்துடன் இணைத்துள்ளோம். தொழில் வர்த்தகப் பொருட்காட்சி வெற்றிகரமாக நடைபெற, பத்திரிகையாளராகிய தாங்கள் பொருட்காட்சியினை பார்வையிட்டு, பொருட்காட்சி குறித்தான தகவல்களை தங்களது மேலான நாளிதழில் விரிவாக பிரசுரம் செய்து, பொதுமக்கள் பொருட்காட்சியில் திரளாகப் பங்கேற்கும் வகையில் தங்களது

# தேனி அல்லிநகரம் நகராட்சி முன்பாக எட்டு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நேதாஜி கட்டுமான தொழிலாளர்கள் நல சங்கம் ஆர்ப்பாட்டம்

தேனி, ஏப்.23

தேனி நேதாஜி கட்டுமானம் மற்றும் சாலையோர வணிகர்கள், தொழிலாளர்கள் முன்னேற்ற நல சங்கம் அல்லிநகரம் நகராட்சி முன்பாக 8 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென ஆர்ப்பாட்டம் செய்தனர்.




சாலையோர வியாபாரிகளுக்கான ஆனணகுழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை மற்றும் மாதம் ஒருமுறை மற்றும் விளக்க கூட்டம், குழுவில் தேர்வு செய்த உறுப்பினருக்கு பெயர், விலாசம் அறிவிப்பு பலகை அடையாள அட்டை மற்றும் சான்றிதழ் இல்லாத சாலையோர வியாபாரிகளுக்கு தற்காலிக அடையாள அட்டை,

வறுமைகோட்டிற்கு கீழே உள்ள பணியாளர்களுக்கு கணக்கெடுப்பு நடத்தி விலையில்லா தள்ளுவண்டி மற்றும் மத்திய மாநில அரசின் நிதி சலுகையில் மானியம் கிடைக்கும் பயனாளிகளுக்கு உடனடியாக கிடைக்குமாறு வலியுறுத்தி மற்றும் ஆணைக் குழுவில் வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்கு டெபாசிட் தொகை ரூ 2 ஆயிரத்தை உடனடியாக வழங்கிட வேண்டும் என்று வலியுறுத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் தலைவர் நாகராஜ் மாவட்ட செயலாளர் சிவசங்கர், நகர தலைவர் அமாவாசை, நகர செயலாளர் மாரிசாமி, நகர இணைச் செயலாளர் மோகன் பாபு, நகர இணை செயலாளர் சையது இப்ராஹிம், தேனி நகர பொறுப்பாளர் கார்த்திக், நகர ஆலோசகர் பால்சாமி நிர்வாக கமிட்டி கலையரசன், பாண்டி மற்றும் மகளிர் அணி கலந்து கொண்டனர்.

# சிவகங்கையில் கட்டுரை போட்டி - பேச்சுப்போட்டி ! ஆட்சியர் தகவல்

சிவகங்கை ஏப்.23

சிவகங்கை மாவட்டம் செம்மொழிநாள் விழாவினை முன்னிட்டு, கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகள் 11, 12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணாக்கர்களுக்கு 09.05.2025 அன்றும், கல்லூரி மாணாக்கர்களுக்கு 10.05.2025 அன்றும் சிவகங்கை மருதுபாண்டியர் நகர், அரசு மேல்நிலைப்பள்ளி வளாகக் கூட்டரங்கில் நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தகவல்.



தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான சூன் 3 அன்று செம்மொழிநாள் விழாவாக 2025ஆம் ஆண்டு கொண்டாடப்பெறவுள்ளது.

“தமிழுக்கு செம்மொழித் தகுதி பெற்றுத் தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமையைப் போற்றிடும் வகையில், அவர் பிறந்த நாளான சூன் திங்கள் 3ஆம் நாள் தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் செம்மொழிநாள் விழாவாகக் கொண்டாடப்படும்”.

செம்மொழியின் சிறப்பையும் முத்தமிழறிஞரின் தமிழ்த்தொண்டின் பெருமையையும் மாணவர்களிடம் உணர்த்திடும் வகையில், ஆண்டுதோறும் அனைத்து மாவட்டங்களிலும் 11, 12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தி, வருகின்ற 03.06.2025ஆம் நாளன்று நடைபெறவுள்ள செம்மொழிநாள் விழாவில் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பிக்கப்பெறுவர்.

சிவகங்கை மாவட்டத்தில் பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சுப் போட்டிகள் வருகின்ற 09.05.2025 (வெள்ளிக் கிழமை) அன்றும், கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சுப் போட்டிகள் வருகின்ற 10.05.2025 (சனிக்கிழமை) அன்றும் சிவகங்கை, மருதுபாண்டியர் நகர், அரசு மேல்நிலைப்பள்ளி வளாகக் கூட்டரங்கில் நடைபெறவுள்ளது. இப்போட்டிகளில், கலந்துகொள்ளும் மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களைத் தமிழ் வளர்ச்சித் துறையின் https://tamilvalarchithurai.tn.gov.in. என்ற இணைய முகவரியின் வாயிலாக பதிவிறக்கம் செய்தோ அல்லது சிவகங்கை, தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரடியாகவோ பெற்று, பள்ளி மாணாக்கர்கள் தலைமையாசிரியரின் பரிந்துரைக்கடிதத்துடனும், கல்லூரி மாணாக்கர்கள் முதல்வர் / துறைத்தலைவரின் பரிந்துரைக்கடிதத்துடனும் வருகின்ற 30.04.2025ஆம் தேதிக்குள் நேரில் விண்ணப்பித்திடல் வேண்டும்.

மாவட்ட அளவிலான பள்ளி/ கல்லூரி மாணாக்கர்களுக்கான, கட்டுரைப் போட்டியில் வெற்றி பெறும் மாணாக்கர்களுக்கு முதல் பரிசாக ரூ.10,000/ மும், இரண்டாம் பரிசாக ரூ.7,000/ மும், மூன்றாம் பரிசாக ரூ.5,000/ மும், பேச்சுப் போட்டியில் வெற்றி பெறும் மாணாக்கர்களுக்கு முதல் பரிசாக ரூ.10,000/ மும், இரண்டாம் பரிசாக ரூ.7,000/ மும், மூன்றாம் பரிசாக ரூ.5,000/ மும், மாநில அளவிலான பள்ளி / கல்லூரி மாணாக்கர்களுக்கான, கட்டுரைப் போட்டியில் வெற்றி பெறும் மாணாக்கர்களுக்கு முதல் பரிசாக ரூ.15,000/ மும், இரண்டாம் பரிசாக ரூ.10,000/ மும், மூன்றாம் பரிசாக ரூ.7,000/ மும், பேச்சுப் போட்டியில் வெற்றி பெறும் மாணாக்கர்களுக்கு முதல் பரிசாக ரூ.15,000/ மும், இரண்டாம் பரிசாக ரூ.10,000/ மும், மூன்றாம் பரிசாக ரூ.7,000/ மும் வழங்கப்படும்.

எனவே, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சயர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.



மதுரை வேளாண்மைக் கல்லூரியில் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதியாண்டு பயிலும் மாணவி வ.கீர்த்தி ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் வாடிப்பட்டியில் பயிற்சி பெற்று வருகின்றார். இந்நிலையில் குலசேகரன் கோட்டையில் உள்ள விவசாயிகளுக்கு தென்னை மரங்களில் காண்டாமிருக வண்டு தாக்குதல் அதிகமாக இருப்பதைக் கேட்டறிந்து அதற்கு தீர்வாக ஆமணக்கு புண்ணாக்கு பொறி குறித்து செயல் விளக்கம் அளித்தார். விவசாயிகளுக்கு அது மிகவும் பயனுள்ளதாக இருத்தது என்று கூறினர். தென்னன பயரில் காண்டமிருக வண்டு தாக்குதலை கட்டுபடுத்த ஒரு கிலோ ஆமணக்குப் புண்ணாக்கினை 5 லிட்டர் தண்ணீரில் மண்பானைகளில் ஊற வைத்து தோப்புகனில் ஆங்காங்கே வைத்து வண்டுகளைக் கவர்ந்து அழிக்கவும் என்ற செய்தியினை கிராம விவசாயிகளுக்கு செயமுறை விளக்கம் அளித்தார்.

# சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு முதலமைச்சருக்கு இயற்கை சந்தை அமைத்து பயன்பெற்று வரும் மகளிர் சுயஉதவிக்குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் நெஞ்சார்ந்த நன்றி

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, அவர்கள் பயன்பெறும் வகையில் தொலைநோக்கு சிந்தனையுடன் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.



அதில் குறிப்பாக, பெண்களின் முன்னேற்றத்திற்கென கலைஞரின் மகளிர் உரிமைத்திட்டம், புதுமைப்பெண் திட்டம், விடியல் பயணம் போன்ற பல்வேறு சிறப்பு திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.






சிவகங்கை மாவட்டத்தில் மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், இயற்கை சந்தை திட்டமானது, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக்குழு விவசாயிகளை ஒன்றிணைத்து அவர்கள் மூலம் இயற்கை முறையில் காய்கறிகள், பழ வகைகள், கீரைகள், தானிய வகைகள், பால், நெய், தேன், காளான் போன்றவைகளை நேரடியாக நுகர்வோர்களுக்கு விற்பனை செய்வதே, அத்திட்டத்தின் நோக்கமாகும்.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 12 வட்டாரங்களைச் சார்ந்த ஆர்வமுள்ள 40 சுய உதவிக்குழு மகளிர் விவசாயிகளை ஒன்றினைத்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படி, சுய உதவிக்குழுவினைச் சார்ந்த உறுப்பினர்கள் விளைவித்த பொருட்களான கத்தரிக்காய், தக்காளி, வெண்டைக்காய், மிளகாய், பப்பாளி, வாழைப்பழம், எலுமிச்சைப்பழம், அவரைக்காய், பூசணிக்காய், தேங்காய், வெள்ளரிக்காய், சுரைக்காய், அரைக்கீரை, தண்டுகீரை, வல்லாரைக்கீரை, முடக்கத்தான் கீரை, மாப்பிள்ளை சம்பா அரிசி, கருப்புக் கவுனி அரிசி, சிவப்புக் கவுனி, குள்ளக்கார், தூயமல்லி, கருப்பு உளுந்து ஆகியவற்றை விற்பனை செய்வதற்கு, மக்கள் அதிகம் கூடும் இடங்களில் ஒன்றான பிரதி வாரந்தோறும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெறும், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தன்று விற்பனை செய்தவற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, விற்பனையும் கடந்த 03.03.2025 அன்று மாவட்ட ஆட்சியரால் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

இயற்கை முறையில் விளைவித்த பொருட்களை சந்தைப்படுத்தி, பொருளாதாரம் ஈட்டி வரும் அரளிக்கோட்டை கிராமத்தை சேர்ந்த மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினரான சீதா தெரிவிக்கையில்,

எனது பெயர் சீதா. நான் சிவகங்கை மாவட்டத்திற்குட்பட்ட அரளிக்கோட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் எனது கிராமப்பகுதியில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக்குழுவில் உறுப்பினராக உள்ளேன்.

நான் உறுப்பினராக இருந்த மகளிர் சுயஉதவிக்குழுவின் சார்பில், மகளிர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் எவ்வாறாக பல்வேறு வகையான நெல் வகைகளை பயிரிட்டு, அதனை சந்தைப்படுத்தி விற்பனை செய்வது என்பது தொடர்பாக வழிகாட்டப்பட்டது. அவ்வழிகாட்டுதலின்படி, 12 ஏக்கர் பரப்பளவில் இயற்கை விவசாயம் மேற்கொள்ள திட்டமிட்டு, பல்வேறு தரப்பு நெல் வகைகளை பயிரிட்டேன்.

தற்போது உள்ள நவீன காலகட்டத்தில், இயற்கை முறையில் விளைவிக்கப்படும் பொருட்களுக்கு நல்ல மதிப்பு உள்ளது. உடலுக்கு ஆரோக்கியத்தை தருவதாகவும் உள்ளது.

இதனை, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் விற்பனை செய்யவும் துறை ரீதியான அறிவுரை கள் பெறப்பட்டு, அதனடிப்படையில் பிரதி திங்கட்கிழமைதோறும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வருகை தருகின்ற பொது மக்கள், தங்களது உற்பத்தி பொருட்களை வாங்கி பயன்பெறுகின்ற வகையில், எங்களது மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் வாயிலாக காய்கறி உள்ளிட்ட பல்வேறு வகையான உற்பத்தி பொருட்களை தரமான முறையில், சரியான விலைக்கு விற்பனை செய்து அதன் மூலம் இலாபம் ஈட்டி பயன்பெற்று வருகின்றோம்.

இதுபோன்று, பெண்களை தொழில் முனைவோர்களாக உருவாக்குவதற்கு அடிப்படையான பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு என்னைப் போன்ற மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என அரளிக்கோட்டை கிராமத்தை சேர்ந்த மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினரான சீதா தெரிவித்தார்.

மேற்கண்ட திட்டத்தின் மூலம் பயன்பெற்று வரும் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினரான சாந்தி தெரிவிக்கையில்,

எனது பெயர் சாந்தி. நான் சிவகங்கை வட்டத்திற்குட்பட்ட பகுதியில் வசித்து வருகிறேன். நான் எங்களது கிராமப்பகுதியில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக்குழுவில் உறுப்பினராக உள்ளேன். எங்களது குடும்பம் விவசாயச் சார்ந்த குடும்பமாகும். எங்களது குடும்பத்தில் அனைவருமே விவசாயம் சார்ந்த தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

எங்களுக்கு சொந்தமாக நிலத்தில் பருவத்திற்கேற்ப, நெல், கேழ்வரகு, வாழை ஆகியவற்றை பயிரிட்டு விவசாயம் மேற்கொண்டு வருகிறோம். அவ்வாறாக, கிடைக்கப்பெறும் வருவாயின் மூலம் எங்களது குடும்பத்தின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றி வந்தோம்.

அச்சமயம், நான் உறுப்பினராக உள்ள மகளிர் சுயஉதவிக்குழுவின் வாயிலாக இயற்கை சந்தை குறித்து அறிந்தேன். முன்னதாக, எங்களது குடும்ப தேவைகளுக்கு மட்டும் கத்திரிக்காய், வெண்டைக்காய், புடலங்காய், பீர்க்கங்காய், பாகற்காய், சுரைக்காய், தேங்காய், வெள்ளரிக்காய், அவரைக்காய் போன்றவைகளையும், பல்வேறு வகையான கீரை வகைகளையும் பயிரிட்டு வந்தோம்.

தற்போது, அதனை விரிவுபடுத்தி, எனது நிலத்தில் பல்வேறு வகையான காய்கறி வகைகளை பயிரிட்டு, அவ்வாறாக கிடைக்கப்பெறும் காய்கறிகளை பிரதி வாரம் திங்கட்கிழமை அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சந்தைபடுத்தி வருகிறேன். இயற்கை முறையில் கிடைக்கப்பெறும் பொருட்கள் என்பதால் மக்கள் இதனை அதிகளவில் வாங்கி செல்கின்றனர்.

எங்களுக்கும் எவ்வித பொருள் சேதமுமின்றி, அவ்வப்போது விளைவிக்கப்படும் காய்கறிகள் விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறாக, கிடைக்கப்பெறும் வருவாயின் மூலம் எங்களது குடும்ப தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பேருதவியாக உள்ளது. இதுபோன்று, பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு மட்டுமன்றி, அவர்கள் தற்சார்பு நிலையினை அடைவதற்கு வழிவகை ஏற்படுத்துவதற்கான திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என இயற்கை முறையில் விளைவித்த பொருட்களை சந்தைப்படுத்தி, பொருளாதாரம் ஈட்டி வரும் சுய உதவிக்குழு உறுப்பினர் சாந்தி தெரிவித்தார்.

# தமிழ்நாடு அரசு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் காவல் சார்பு ஆய்வாளர்கள் (SI) பொதுத் தேர்விற்கான இலவச பயிற்சி

சிவகங்கை ஏப்.23

சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் செயல்படும் தன்னார்வப் பயிலும் வட்டம் வாயிலாக பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கு இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில், தற்போது தமிழ்நாடு அரசு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியத்தால் காவல் சார்பு ஆய்வாளர்கள் (SI) (தாலுகா மற்றும் ஆயுதப்படை) பதவிகளுக்கு மொத்தம் 1,299 காலிப்பணியிடங்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) அறிவிக்கப்பட்டுள்ளது.



மேலும், இத்தேர்விற்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் வருகின்ற 25.04.2025 முதல் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் காலை 10.30 மணி முதல் பிற்பகல் 01.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இத்தேர்விற்கு விண்ணப்பம் செய்வதற்கான கல்வித்தகுதி ஏதாவது ஒரு இளங்கலை பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். வயது வரம்பு 01.07.2025 அன்றைய தேதியில் குறைந்தபட்சம் 20 வயது பூர்த்தி அடைந்தவராகவும், பொதுப்பிரிவினருக்கு அதிகபட்ச வயதுவரம்பு 30, BC/MBC 32, SC/ST-35, ஆதரவற்ற விதவை 37 ஆகும். இத்தேர்விற்கு வருகின்ற 03.05.2025 ஆம் தேதி வரை இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

மேலும், இணையதளம் வாயிலாக விண்ணப்பம் செய்யவதற்கும், தேர்வு தொடர்பான கூடுதல் விவரங்களுக்கும் www.tnusrb.tn.gov.in என்ற இணையதள முகவரியைப் பயன்படுத்தி விவபரங்கள் பெறலாம்.

எனவே, சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியான வேலைநாடுநர்கள் மேற்காணும் தேர்விற்கு இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பம் செய்து, இலவசப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளலாம். மேலும், இலவச பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்பும் வேலைநாடுநர்கள் 04575 240435 என்ற அலுவலக தொலைபேசி எண்ணிலோ அல்லது நேரிலோ வருகை புரிந்து தங்களது பெயரைப் பதிவுசெய்து கொள்ளலாம்.

அதுமட்டுமன்றி, போட்டித்தேர்வுகளுக்குத் தயார் செய்து வருகின்ற இளைஞர்கள் பயன்பெறும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பாக தொடங்கப்பட்டுள்ள www.tamilnaducareerservices.tn.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக பதிவுசெய்து கொண்டு, இவ்விணையதளத்தின் வாயிலாக மத்திய மாநில அரசு நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கான பாடக்குறிப்புகள் மற்றும் மாதிரி வினாவிடைகள் ஆகியவற்றை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161